உ

தெய்வீகப் பெண்கள் புலம்பும்

தெய்வலோக

ஒப்பாரி

Dr. U. V. S. IYER LIBRARY
MADRAS-90

ஆர். ஜி. பதி அண்டு கம்பெனி.

சென்னை.

இதன் விலை] 1939. [அணா 1.

கடவுள் துணை.

தெய்வலோக ஒப்பாரி.

கடலேகடலாக்கி என்னைபெத்தாளே அம்மாடி
நான்கருங்கடலைமத்தாக்கி இன்றைக்கு
தயிர்கடையும்வேளியிலே தங்கிவந்துசேர்ந்துதம்மா

ஆருடையதங்கியென்று என்னைபெத்தாளே அம்மாடி
அவித்துபிரிச்சி ஆராய்ந்துபார்க்கையிலே
மாதாவுடதங்கியென்று என்னைபெத்தாளே அம்மாடி

இதுதாயாருடையதங்கியென்று என்னைபெத்தாளே அம்மா
தரைமேல்புரண்டழுதேன் யெனக்கு
ஒருவரல்லயிருவரல்ல ஒன்றுரெண்டுபேருமல்ல

சந்தனசோலையிலே யென்னபெத்தாளே அம்மாடி
சாஞ்சதெல்லாம்யென்சேனை இன்றைக்கு
குங்குமச்சோலையிலே குமிழ்ந்ததெல்லாம் யென்சேனை

மானமிருண்டு மழைரெண்டுவருகையிலே யென் அம்மாடி
மாமரத்துசோலையிலே மனகொரைசொன்னாலும்
மாங்காகரித்துடும்மா மாமரம் பட்டுவிடும்

பூமியிருண்டு பொழுதுரெண்டுபோகையிலே யென் அம்மாடி
பூமரத்துசாலையிலே யென்பெண்குறை சொன்னேனால்
பூவும்கரிகிவிழும் இந்தபூமரமும்பட்டுவிடும்

மேற்கேவெகுதூரம் என்னைபெத்தாளே அம்மாடி
மிளகுபயிருமிட்டேன் இந்த
மிளகுபொரிக்கியெடுக்க இங்கேமுதலாளி இங்கேயில்லை

தெற்கேவெகுதூரம் என்னைபெத்தாளே அம்மாடி
சீரகம்பயருமிட்டேன் இன்றைக்கு
சீரகம்பொரிக்கியெடுக்க சோலையுள்ளேயாருமில்லை

வடக்கேவெகுதூரம் என்னைபெத்தாளே அம்மாடி
வாழ்மதுரைமுக்காதம் துலக்கருடைய
சீமையிலேநான் துவரையயருமிட்டேன்

நான்தூரிவருமுன்னே என்னைபெத்தாளே அம்மாடி
துலுக்கர்பயம் மெத்தவைத்தாய் நான் •
கண்டுவரும்பின்னே கள்ளர்பயம் மெத்தவைத்தாய்

என் அம்மாடி என்னைபெத்தாளே அம்மாடி
வெள்ளியாலேபாடை கட்டலாம்மென்றாலும்
வெய்யலேரிபோகுமென்பார் பொன்னாலே
பாடைகட்டலாமென்றாலும் பொழுதேரிபோகுமென்பார்

தங்கத்தாலேபாடைக் கட்டலாமென்றாலும்
என்னைபெத்தாளே அம்மாடி தாமசங்கள் ஆகுமென்பார்
பனைத்தாலேதேர்பண்ணால் பாசைபிடிக்குமென்பார்

மரத்தாலேதேர்பண்ணால் என்னைபெத்தாளே அம்மாடி
செல்லுப்பிடிக்குமென்பார் நான்
மண்ணாலேதேருபண்ணால் மக்கிகறையுமென்பார்

பூவாலேயாடைகட்டி என்னைபெத்தாளே அம்மாடி
பிறந்தவிடம் அனுப்பிட்டு
நீபெத்தபெண்ணு புரண்டு அழுவநாளாச்சே

பார்க்கவருவோமென்றால் என்னைபெத்தாளே அம்மாடி
பங்கும்பங்காளி பாதினள் தாயாதி
பாம்பேயெதிரேவைத்து பாலாத்தை முன்னேவைத்து
பாம்பேநான்தாண்டுவேனா பாலாத்தைநீஞ்சுவேனா

தேடிவருவோமென்றால் என்னைபெத்தாளே அம்மாடி
பங்கும்பங்காளி பாதினுள் தாயாதி
தேளேயெதிரேவைத்து செய்யாத்தைமுன்னேவைத்து
தேளேயேதாண்டுவேனு செய்யாத்தைநீஞ்சுவேனு

சீதையம்மாள்பெத்தபெண்ணு என்னைபெத்தாளே அம்மாடி
ஸ்ரீராமர்பெத்தகண்ணு யெனக்கு
ஜீவனிருக்கையிலே என்னை பெத்தாளே அம்மாடி
சேதிசொன்னு வாகாதா

அல்லி அம்மாபெத்தபெண்ணு என்னை பெத்தாளே அம்மாடி
அர்ச்சுனரைபெத்தகண்ணு யெனக்கு
ஆவிகிடைக்கையிலே என்னைபெத்தாளே அம்மாடி
ஆளுவிட்டாலாகாதா

மதுரைநல்லகூடாரம் யென்புரவிகண்ணாளா
அவருக்கு மல்லியப்பூ வியாபாரம் நான்
மங்கைவருவேனென்றுயெனக்குமரத்துக்கொருகாவலானர்

செஞ்சிநல்லகூடாரம் யென்பிறவி கண்ணாளா
அவருக்குசெண்பகப்பூ வியாபாரம் நான்
சீதைவருவேனென்று யெனக்குசெடிக்கொருகாவலானர்

அல்லிக்கிதாமரைக்கு என்னைபெத்தாளே அம்மாடி
ஐந்துலக்ஷம் சேனையுண்டு
ஆகாசதாமரைக்கி என்னைபெத்தாளே அம்மாடி
எனக்கு அண்ணனில்லை தம்பியில்லை

கொடிக்கும்தாமரைக்கும் என்னைபெத்தாளே அம்மாடி
கோடிலக்ஷம் சேனையுண்டு
இந்தஅரும்பாவிசண்டாளிக்கி என்னைபெத்தாளே அம்மாடி
எனக்குஅக்காயில்லை தங்கையில்லை

அண்டம்மதில்யெழுப்பி என்னைபெத்தாரே அப்பாவே
அகடமரம்தோப்பாக்கி இன்றைக்கி
அண்டம்மதில் இடிஞ்சா யெனக்கு
அண்ணன் தம்பி தாங்குவாரு

பக்கம்மதில்யெழுப்பி என்னைபெத்தாரே அப்பாவே
பகடமரம்தோப்பாக்கி இன்றைக்கி
பக்கமதிலிடிஞ்சால் உனக்கு
பங்காளி தாங்குவாரு

சுத்திமதில்யெழுப்பி என்னைபெத்தாரே அப்பாவே
சுருளுமரம்தோப்பாக்கி இன்றைக்கி
சுத்திமதிலிடிஞ்சா யெனக்கு
சித்தப்பன் தாங்குவாரு

கருங்காக்கைசெங்காக்க என்னைபெத்தாளே அம்மாடி
கலந்துபழம்யுண்ணயிலே நான்
கதுவைபிடிக்கச்சொல்லி
காந்தாளமாய்நின்று அழுதேன்

செங்காக்கை கருங்காக்கை என்னைபெத்தாளே அம்மாடி
செவுந்தபழம்வுண்ணயிலே நான்
செவுத்தை பிடிக்கசொல்லி
துவண்டாபோல் நின்றழுதேன்

ஒத்தகல்லுமோடியம்மா என்னைபெத்தாளே அம்மாடி
ஒத்திமரம் சாலையம்மா நான்
ஒருபெண்ணுநின்று அழுதால்
உலகமெல்லால்தான் அழுகும்

பாம்புக்குரெண்டுகண்ணு என்னபெத்தாளே அம்மாடி
பார்வதியாள்பெத்தபெண்ணு உன்னை
பாடையிலேவைக்கும்போது பாம்பாபுரளுநரவே

தேனுக்குரெண்டுகண்ணு என்னபெத்தாளே அம்மாடி
தேவேந்திரன் பெத்தபெண்ணு உன்னை
தேர்மேலேவைக்கையிலே தேளாய் துடிக்கிறேனே

மதுரைக்கிளிப்பிள்ளை என்னைபெத்தாளே அம்மாடி [ண்ணு
மண்டபத்துகண்ணாடி இன்றைக்கு மங்கையம்மா பெத்தபெ
என்னைபெத்தாளே அம்மாடி வனமழிஞ்சிநிற்குறேனே

சீமைகிளிப்பிள்ளை என்னைபெத்தாளே அம்மாடி
சிம்மாதானம்கண்ணாடி சீதையம்மா பெத்தபெண்ணு
என்னைபெத்தாளே அம்மாடி இன்றைக்குநான்சீர்குலைந்து

மேட்டுதெருவிலே மூதேவி அத்தையம்மா [நிற்குறேனே
மூத்தரதம் போகுதென்று
ஓட்டமாய்வந்து உன்ரதந்தான் போகுதம்மா

பள்ளத்தெருவிலே அத்தையம்மா நல்பவழத்
தேர்போகுதென்றிருந்தேன் என்
ஆளைப்பெற்றெடுத்த அத்தைரதம்போகுதம்மா

அஞ்சிபிராயத்திலே என்னைபெத்தாளே அம்மாடி
அறியாதநாளையிலே நான்
பத்துபிராயத்திலேநான் பால்குடிக்குநாளையிலே

பாவாடைகட்டியம்மா என்னைபெத்தாளே அம்மாடி
பகுத்தறியாநாளையிலே நான்
சித்தாடைகட்டியம்மாநான் சுத்திவரும்நாளையிலே

பந்தாடுகூட்டத்திலே என்னைபெத்தாளே அம்மாடி
செண்டாடபெண்பிறந்தேன் நான்
செண்டாடும்கூடத்திலேநான் செவுண்டாடபெண்பிறந்தேன்

அந்தரமாய்கால்நிறுத்தி என்னைபெத்தாளே அம்மாடி
ஆகாஷமாய்பந்தலிட்டு இன்றைக்கு
சந்திரரும்சூரியரும் சாக்ஷாத்ஈஸ்வரரும்

இந்திரரும்வானவரும் என்னைபெத்தாளே அம்மாடி
யெழுதுகல்லபிர்மாவும் இன்றைக்கு
முப்பத்துமுக்கோடி தேவர்களும்முனிவரும்

நாற்பத்தியெண்ணாயிரம்ரிஷி என்னைபெத்தாளே அம்மாடி
நவகோடிரிஷிகளும் இவரை
யெல்லோரும் சாக்ஷிவைத்து

நான் அம்மிவலமாக அரசாணிகால்முன்பாக
என்னைபெத்தாளே அம்மாடி இன்றைக்கு
யேத்திவிட்ட திருவிளக்கு

இன்றைக்கு அவியாதா நான்கலகப்பட்டு நிற்கிறதா
தாலிஅரும்பெடுத்த என்னைபெத்தாளே அம்மாடி
தட்டானால்குற்றமில்லை

சேலைஅரும்பெடுத்த சேணியனால்குற்றமில்லை
மேளம்வாசிக்கவந்த என்னைபெத்தாளே அம்மாடி
நாவிதனால்குற்றமில்லை இன்றைக்கு

பஞ்சாங்கம் பார்க்கவந்த பார்ப்பானால்குற்றமில்லை
எல்லோருந்தலையிலே என்னைபெத்தாளே அம்மாடி
அஞ்செழுத்துஆறெழுத்து இன்றைக்கு

யென்பாவிதலையிலே பத்தெழுத்துபாவனையா
யெழுதினவன்கண்குருடா என்னைபெத்தாளே அம்மாடி
யெழுத்தாணிகூரொடிய இன்றைக்கு

எழுதினவன்பெண்ஜாதி என்னைபோல்நின்றழுவாளாச்சே
என்ஜோடுபெண்டுகளா யென்இளைவாழைத்தண்டுகளா
சீனிசர்க்கரைகளா சீமையுள்ளபெண்டுகளா

இன்றைக்குவேரிமனஞ்சலித்தால் என்னைபெத்தாளே அம்
உயரேபருந்துவிடும் இன்றைக்கு [மாடி
நானேமனஞ்சலித்தால் நடுவேரில்நின்றுவிடும்

இன்றைக்குகுயில்மனஞ்சலித்தால் என்னைபெத்தாளே
அதுகூவிகுரல் அசையும் இன்றைக்கு [அம்மாடி
மயில்மனஞ்சலித்தால் வெய்யிலிலேவாடிவிடும்

இன்றைக்குகோழிமனஞ்சலித்தால் என்னைபெத்தாளே
குப்பையைசீச்சிவிடும் இன்றைக்கு [அம்மாடி
செம்பரித்திமனஞ்சலித்தால் செடியில்மறைந்துவிடும்

இன்றைக்குபருந்துமனஞ்சலித்தால் என்னைபெத்தாளே
பட்டணத்தேவட்டமிடும் இன்றைக்கு [அம்மாடி
காக்கைமனஞ்சலித்தால் காதம்போய்காதம்வரும்

இன்றைக்கு குருவிமனஞ்சலித்தால் என்னைபெத்தாளே
கூண்டுவிட்டுகூண்டுபாயும் இறைக்கு [அம்மாடி
கொக்குமனஞ்சலித்தால் குளத்தைசுத்திசுத்திவரும்

இன்றைக்கிமாடுமனஞ்சலித்தால் என்னபெத்தாளே அம்
மந்தையிலேபோய்நிற்கும் இன்றைக்கு [மாடி
ஆடுமனஞ்சலித்தால் சந்தையிலேபோய்நிற்கும்

இன்றைக்குபாம்புமனஞ்சலித்தால் என்னைபெத்தாளே
பச்சையிலேமேல்பள்ளிகொள்ளும் இன்றைக்கு [அம்மாடி
பாவிமனஞ்சலித்தால்யென்னை ஆதரிப்பார்யாருமில்லே

என்னீடுபெண்டுகளா இளவாழைத்தண்டுகளா
எனக்குயேத்தகண்ணிகளா யென்குறையைகேளுங்கடி

நான்தானும்பெண்பிறந்தேன் நாட்டில்பிறக்கலையா
நாடெங்கும்வாழலியா இந்திரனூர்பட்டணத்தில்
இந்திராணிவாழலியா தேவேந்திரன்பட்டணத்தில்
தெய்வரம்பைவாழலியா நான்பெண்ணாய்பிறந்தகொள்ளே

கல்லிழைத்தஊஞ்சலிலே என்னைபெத்தாளே அம்மாடி
பொன்னிழைத்தபாய்போட்டு இன்றைக்கு
அக்காளுந்தங்கையரும் உட்கார்ந்துஆடையிலே

வந்தாண்டிதாயல்காரன் என்னைபெத்தாளே அம்மாடி
வஞ்சியரைதான் அழைத்து நான்வாசித்துபார்த்துஅல்லோ
நான் அழுதகண்ணீரு குட்டைகுளம்நிரம்பி
குதிரை குளிப்பாட்டி

முன்னூறுபார்ப்பாரும் என்னைபெத்தாளே அம்மாடி
முழுகிதலையாத்தி நானூறுபார்ப்பாரும் [செய்துவைத்தார்
நாமங்குழைத்துயிட்டு ஐனூறுபார்ப்பாரும் அர்ச்சனைகள்

பூமிஇரண்டுபொழுது ரெண்டுபோகையிலே
என்னைபெத்தாளே அம்மாடிநான்
பூடரத்துசோலையிலே பெண்குறைசொன்னாலும்
பொழுதுவிடியாது பொற்கோழிதூங்காது

இந்திரனும்நீர்தெளிக்க என்னைபெத்தாளே அம்மாடி
சந்திரனும்பூவெடுக்கஇன்றைக்கு வாணியன்செக்கோட்ட
வண்ணான் அழுக்கெடுக்க சேணியன்நூல்போட
செம்படவன் வலைபோட

மங்கையொருத்தியம்மா என்னைபெத்தாளே அம்மாடி
நான்மனம்கலங்கி நிற்கிறது
வந்தவருக்கு சம்மதமா.

தெய்வலோக ஒப்பாரி முற்றிற்று.

V. press Madras.

...ரப் புஸ்தகங்கள்	அ.	பை.
கிட்டப்பா மரணனுதாப மஞ்சரி (முதற் பாகம்)	1	0
கிட்டப்பா மரணனுதாபமஞ்சரி (இரண்டாம் பாகம்)	1	0
கிளிக்கண்ணி	0	6
குறத்தி பாட்டு	0	6
குருவிக்காரி பாட்டு	0	6
இடைச்சி பாட்டு	0	6
அத்தான் பாட்டு	0	6
தீண்டாமை கீதம்	0	6
தேசியக்கொடி பாட்டு	0	6
மதுவரக்கன் பாட்டு	0	6
சின்னப் பெண்ணு தலைக்காணி மந்திரம்	0	6
தொழிலாளர் பாட்டு	0	6
காங்கிரஸ் பாட்டு	0	6
சின்ன பாப்பா கீதம்	0	6
பழனிவேல் கீதம்	0	6
எமலோக ஒப்பாரி	0	6
தெய்வலோக ஒப்பாரி	0	6
தங்கரத்தின ஒப்பாரி	0	6
நவரத்தின ஒப்பாரி	0	6
மனோரஞ்சித ஒப்பாரி	0	6
நவீன ஒப்பாரி	0	6
பஞ்சரத்தின ஒப்பாரி	0	6
அற்புத ஒப்பாரி	0	6
பாவையர் ஒப்பாரி	0	6
மனோன்மணி ஒப்பாரி	0	6
மரகத ஒப்பாரி	0	6
சாவித்திரி ஒப்பாரி	0	6
பரிமள ஒப்பாரி	0	6

ஆர். ஜி. பதி அண்டு கம்பெனி,

நெ, 4, வெங்கடராமய்யர் தெரு, ஜி. டி. சென்னை.